**<u>செயற்பொறியாளர், நீவது., ஆரணியாறு வடிநில கோட்டம், சேப்பாக்கம், சென்னை – 5.</u>**

**முன்னிலை: பொறி. கோ.ரா.ராதாகிருஷ்ணா, பி.இ., எம்.எஸ்.,**
செயற்பொறியாளர், நீவது.,

**<u>செயல்முறை ஆணை எண். நிஎ2 /639–2/ 2024 / நாள்: 30.07.2024.</u>**

**பொருள்:** பணியமைப்பு – நீ.வ.து – த.நா.அ.ப.தொகுதி – திரு.R.விஜய்ராம் ஈஸ்வர், இளநிலை உதவியாளர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீ.வ.து., சென்னை–5 அவர்களின் செயல் முறை ஆணை எண். எஸ் 3(2)/23897/2023/நாள்:13.03.2023.
2. தலைமைப் பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம், சென்னை– 5 அவர்களின் செயல்முறைஆணை எண்.இ1(1)/ 1825/ 2023/ நாள்: 15.03.2023.
3. கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., பாலாறு வடிநில வட்டம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.இ2/ 687/ 2023/நாள்: 13.04.2023.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். நிஎ2/639/2023/நாள்: 31.05.2023.
5. அரசாணை எண். 33/தொழிலாளர் நலன் (மற்றும்) வேலை வாய்ப்பு துறை நாள்: 08.03.2023.
6. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீ.வ.து., அவர்களின் கடித எண். 1321/பி1/2024–1/நாள்: 02.04.2024.

*-*-*-*-*-*-*

பார்வை 1 முதல் 4–ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.ஐ.ராஜேந்திரன், உதவியாளரின் மகன் திரு.R.விஜய்ராம் ஈஸ்வர் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டதை தொடர்ந்து, தனியர் இக்கோட்ட அலுவலகத்தில் 01.06.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

பார்வை–6–ல் காணும் முதன்மை தலைமை பொறியாளர் அவர்களின் கடிதத்தில், பார்வை–5–ல் காணும் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதலில் கருணை அடிப்படையில் பணி நியமன விதிகளின்படி கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிவரன்முறை குறித்த கருத்துருவில் விதித்தளர்வு தேவைப்படாத இனங்களில் பணி நியமன அலுவலர் நிலையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், விதி 17–ன்படி கல்வித் தகுதி தவிர இதர விதித் தளர்வு தேவைப்படும் பணியாளர்களின் பணிவரன்முறை தொடர்பான கருத்துருக்களை மட்டும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

த.பி.பா...

அதனை தொடர்ந்து, திரு.R.விஜய்ராம் ஈஸ்வர், இளநிலை உதவியாளர் பணிவரன் முறை தொடர்பாக விதித் தளர்வு ஏதும் இல்லாத காரணத்தினால் கீழ்கண்டவாறு அவரது பணியினை வரன்முறை செய்யப்படுகிறது.

| வ.எண் | பெயர் | பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | R.விஜய்ராம் ஈஸ்வர் | இளநிலை உதவியாளர் | 21.08.2003 | 01.06.2023 மு.ப | 01.06.2023 மு.ப |

அதனடிப்படையில் தனியரின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 2016) பிரிவு 17(1)–ன்படி திரு.R.விஜய்ராம் ஈஸ்வர், இளநிலை உதவியாளர் அவர்களுக்கு பணியில் சேர்ந்த நாளான 01.06.2023 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், தனியர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டுகளில் இரண்டாண்டு தொடர்ந்து பணியாற்றலுக்குட்பட்டு தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், இவர் மூன்று ஆண்டு கால தொடர் பணியில் இரண்டு ஆண்டு கால தகுதி காண் பருவத்தினை நிறைவு செய்திட வேண்டும் எனவும், இவரது தகுதிகாண்பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்த பெறும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், உதவியாளர் பதவி உயர்வுக்கு மாவட்ட நடைமுறை நூல் தேர்விலும், பொதுப்பணித்துறை அலுவலர் மற்றும் சார்நிலை பணியாளர்களுக்கான கணக்கு தேர்வு பாகம் – I மற்றும் II தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/...
செயற்பொறியாளர், நீவது.,
ஆரணியாறு வடிநில கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை–5

பெறுநர்
திரு.R.விஜய்ராம் ஈஸ்வர்
இளநிலை உதவியாளர்,
ஆரணியாறு வடிநில கோட்டம், சேப்பாக்கம், சென்னை–5

நகல் : முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் : தலைமைப் பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் : கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., பாலாறு வடிநில வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் : இருப்பு கோப்பு

30/7/24
செயற்பொறியாளர், நீவது.,
ஆரணியாறு வடிநில கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை–5
30.07.24